பிரசங்க இலக்கம்: 4 வேதப் பகுதி: அப்போஸ்தலர் 27:1-20

# திருத்தப்படவேண்டிய தீர்மானங்கள்

மானிட வாழ்வு பலவிதமான தீர்மானங்களை எடுக்கவேண்டிய பல்வேறு விதமான சூழ்நிலைகளுக்கு ஊடாகச் செல்கின்றது. நாம் சரியான தீர்மானங்க ளையும் முடிவுகளையும் எடுத்தால் நம்முடைய வாழ்வு ஆசீர்வாதமானதாக இருக்கும். சில நேரங்களில் நாம் எடுக்கும் பிழையான தீர்மானங்கள் நம்முடைய வாழ்வை மட்டுமல்ல, மற்றவர்களுடைய வாழ்வையும் பாதிக்கின்றது. (சில உதாரணங்கள்: ஆதாம், ஆபிரகாம், லோத்து, தாவீது).

அப்போஸ்தலர் 27ம் அதிகாரத்தில் "யூலியு" என்னும் ஒரு மனிதன் எடுத்த பிழையான ஒரு தீர்மானம் எவ்வாறு அவனையும் மற்றவர்களையும் பாதித்தது என்பதை அறியத்தருகின்றது.

யூலியு என்பவன் பவுலையும் வேறு சில கைதிகளையும் இத்தாலிக்கு கூட்டிக் கொண்டுபோவதற்காக நியமிக்கப்பட்டிருந்த மனிதன். இவன் இத்தாலிக்குச் சென்ற கப்பல் சீரற்ற காலநிலை காரணமாக "நல்ல துறைமுகம்" என்னும் துறைமுகத்தில் நீண்டகாலம் தரித்திருந்தது. ஆனால் சில காலம் சென்ற பின்னர் அவ்விடத்தைவிட்டு உடனடியாக செல்லவேண்டும் என்று யூலியு தீர்மானித்தான். எனினும் கப்பல் அத்துறைமுகத்தைவிட்டுச் சென்று சிறிது நேரத்திற்கெல்லாம் கடும் காற்றின் தாக்குதலுக்கு உட்பட்டது. கப்பலில் பிரயாணம் செய்தவர்களும் பலவிதமான சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர். யூலியுவின் பிழையான தீர்மானம் ஆபத்தாய் முடிந்தது.

யூலியுவின் தீர்மானம் பிழையானதாய் இருந்ததற்கான காரணங்கள் இப்பிரசங்கத்தில் ஆராயப்பட்டுள்ளன.

## (1). அவன் பொறுமை இழந்தவனாக அவ்விடத்தைவிட்டுச் செல்ல தீர்மானித்தான்.

நல்லதுறைமுகத்தில் நீண்டகாலம் இருந்தமையால் யூலியு பொறுமை இழந்தவனாக அவசரப்பட்டு ஒரு தீர்மானத்தை எடுத்தான். இதனால் பாதுகாப்பாய் இருக்கக்கூடிய இடத்தைவிட்டுச் சென்று ஆபத்தில் சிக்கிக் கொண்டான்.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு பொறுமை அவசியம். வேதாகமம் நீடிய பொறுமையைப் பற்றி கூறுகிறது (யாக்கோபு 5:7-8). இது ஆவியின் கனியாகவும் உள்ளது (கலாத்தியர் 5:22).

கோழிக்குஞ்சுகள் நமக்குத் தேவையானால் முட்டைகளை உடைப்பதன் மூலமாக அல்ல, அவற்றைக் கோழி அடைகாக்கும் வரை பொறுமையாக காத்திருக்க வேண்டும்.

தேவனுடைய நேரம் வரும்வரை பொறுமையாகக் காத்திருக்கவேண்டியது கிறிஸ்தவனின் தன்மையாக உள்ளது (புலம்பல் 3:24-26, சங்கீதம் 42:5).

## (2). அது பொருத்தமற்ற இடம் என்பதனால் அவ்விடத்தைவிட்டுச் செல்ல தீர்மானித்தான்

நல்ல துறைமுகம் மழைகாலத்தில் தங்குவதற்கு வசதியற்றதாய் இருந்தது (அப்.27:12). இதனால் யூலியு அவ்விடத்தைவிட்டு உடனடியாகச் செல்ல வேண்டும் என்று தீர்மானித்தான். ஆனால் 21ம் வசனத்தின்படி அவன் அச்சமயம் இருப்பதற்கு நல்லதுறைமுகமே பொருத்தமான இடமாக இருந்துள்ளதை நாம் அறிந்திடலாம்.

இடத்தை மாற்றுவதனால் பிரச்சனை தீர்ந்துவிடாது. உதாரணம் ரூத் 1ம் அதிகாரம். பிரச்சனை தீர்வதற்கு இடம் அல்ல நம் இதயமே மாற்றப்பட வேண்டும். அதாவது நாம் பிரச்சனையைப் பார்க்கும் விதமும் அதை அணுகும் விதமும் மாற்றமடைய வேண்டும்.

## (3). அது பெறுமதியான சந்தர்ப்பம் என்பதனால் அவ்விடத்தைவிட்டுச் செல்லத் தீர்மானித்தான்.

பொறுமையிழந்த யூலியு, தான் இருக்குமிடம் பொருத்தமற்றது என்று நினைத்த போது, தென்றல் மெதுவாயடித்ததாக 13ம் வசனம் கூறுகின்றது. அதுவரையில் கடுமையாயிருந்த கடல் அமைதியடைந்து தென்றல் வீசியது. எனவே இதுவே தான் புறப்படுவதற்கு சரியான சந்தர்ப்பம் என்று யூலியு நினைத்தான். ஆனால் கொஞ்ச நேரத்தில் தென்றல் புயலாக மாறிவிட்டது (அப்.27:13-14).

சந்தர்ப்ப சூழ்நிலை சாதகமாக இருப்பதை மட்டும் கருத்திற்கொண்டு நாம் தீர்மானங்கள் எடுக்கக்கூடாது.

## (4). அது பெரும்பான்மையினரின் கருத்து என்பதனால் அவ்விடத்தைவிட்டுச் செல்ல தீர்மானித்தான்

கப்பலிலிருந்தவர்கள் அனைவரும் உடனடியாக இவ்விடத்தைவிட்டுச் செல்வதே சரியானது என்று கூறினார்கள் (அப்.27:11-12). இது தேவமனிதனான பவுலின் ஆலோசனைக்கு முரணானதாக இருந்தது (அப்.27:9-10). யூலியு தேவனைவிட மனிதரை நம்பினான். தேவவார்த்தையிவிட மானிட வார்த்தையை நம்பினான்.

உலகம் இன்று பெரும்பான்மையினரது கருத்தே சரியானது என்று நினைக்கிறது. ஆனால் வேதாகமமோ தேவனுடைய கருத்தே சரியானது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

தீர்மானங்கள் எடுக்கும்போது, தேவனுடைய வார்த்தையே நமக்கு வழிகாட்டும் ஒளியாகவும் ஆலோசனை தரும் ஆசானாகவும் இருக்கவேண்டும். நமது திட்டங்கள் தீர்மானங்கள் அனைத்தும் தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் திருத்தப்பட வேண்டும். தேவனுடைய வார்த்தையின்படி நாம் திட்டமிட வேண்டும் (சங்.119:1-2). நாம் பரிசுத்தமாய் வாழ்வதற்கும் (சங்கீதம் 119:9-16), மகிழ்ச்சியோடு இருப்பதற்கும் (சங்கீதம் 119:92), சரியான பாதையில் செல்வதற்கும் (சங்கீதம் 119:105) தேவனுடைய வார்த்தையே நமக்கு உதவியும் ஆலோசனையும் அளிக்கின்றது (சங்கீதம் 119:24).